**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.20/2020**
Prosecution: **PW1**

| Name | திரு.கோபிநாத் |
| --- | --- |
| Husband/Father Name | திரு.நடராஜன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **27.11.2025.**

சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு Crl.Mp.No.995/2025-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.09.2025-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

தகராறு நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுமார் 50-லிருந்து 100 நபர்கள் கூடியிருந்திருப்பார்களா என்றால் ஆமாம். முப்பதுவெட்டி என்ற ஊருக்கு என் தந்தை நாட்டாமையாக இருந்தார் என்றால் சரிதான். பாட்டாளி மக்கள் கட்சியில் என் தந்தை கிளை செயலாளராக அந்த சமயத்தில் இருந்தார் என்றால் இல்லை. என் தந்தை அந்த ஊரில் நாட்டாமையாக இருந்ததால் பிரச்சனை ஏதாவது இருந்தால் அதை தீர்த்துவைப்பார் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு நன்கு தெரிந்தவர்கள். 1 மற்றும் 2 ஆஜர் எதிரிகள் பாஸ்கர் மற்றும் கண்ணன் இந்திய ராணுவத்தில் பணியாற்றி வந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.2 ராஜேந்திரன், அ.சா.4 விஜயக்குமார், அ.சா.5 ரஞ்சித் ஆகியோர் என் உறவினர்கள் என்றால் சரிதான். தகராறு நடந்த போது என் தந்தை அடிபட்ட போது நான் சென்று அதை தடுக்க முயற்சித்தேனா என்றால் அந்த இடத்தில் நிறைய பேர் இருந்ததால் நான் தடுக்க முயற்சி செய்யவில்லை. என் தந்தை அடிபட்டு அவரது ரத்தம் சம்பவ இடத்தில் சிந்தியது. அடிபட்ட என் தந்தையை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. என் தந்தையை மருத்துவமனைக்கு அழைத்து சென்றவர் யார் என்பதை என்னால் அந்த கூட்டத்தில் பார்க்க முடியவில்லை. என் தந்தையை மருத்துவமனைக்கு வேறு நபர்கள் அழைத்து சென்ற போது பின்னாலேயே நானும் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும்

அ.சா.ஆ.1 புகார் மனுவை நான் என் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். அந்த புகார் மனுவை எழுதியவர் யார் என்று எனக்கு தெரியாது. வேறு ஒருவர் எழுதியதில் நான் கையெழுத்து மட்டும் போட்டேன். தகராறு நடந்த போது கூட்டமாக இருந்ததால் யார்யார், யாரை எந்தெந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்பதை பார்க்க முடிந்ததா என்றால் என்னால் அதை குறிப்பிட்டு சொல்லமுடியாது. 2014–ம் ஆண்டு நடந்த சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக போலிசார் இந்த வழக்கில் ஆஜர்படுத்தியுள்ள இரும்பு ராடுகள் மற்றும் முள்வேலி கொம்புகளை நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு போலிசாரிடம் அடையாளம் காண்பிக்கவில்லை. வேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் கொடுக்கும் போதும், வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாமல் போலிசார் சொல்லிக்கொடுத்தபடி சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மற்றும் நேரத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் நான் சம்பவ நடந்த இடத்தில் இருந்திருந்ததால் சண்டையை தடுத்திருந்திருப்பேன் என்றாலும், மருத்துவமனைக்கு நானே என் தந்தை அழைத்து சென்றிருப்பேன் என்றாலும், சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் தந்தை நாட்டாமை என்பதால் அவர் செய்த பஞ்சாயத்துகளால் பாதிக்கப்பட்ட அடையாளம் தெரியாத நபர்கள் யாரோ என் தந்தையை தாக்கியிருக்கிறார்கள் என்றாலும், அதை மறைத்துவிட்டு சம்பவ இடத்தில் இல்லாத இந்திய இராணுவத்தில் பணிபுரியும் 1, 2 எதிரிகள் மற்றும் எனக்கு நன்கு தெரிந்த மற்ற எதிரிகளையும் இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றாலும் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்தபடி முதல் விசாரணையில் பொய் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது சாதி ரீதியான காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் எதிரிகளால் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் முதலில் விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2025.11.27 16:53:25 -0500

I Additional District & Sessions Judge,
Ranipet.